Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 017 | வெள்ளிக்கிழமை Friday | 17.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து முதலமைச்சர் ஸ்டாலின் போராட்டம்





நாமக்கல்: தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றியும், மசோதா நகலை தீயிட்டு எரித்தும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுகவினர் நாமக்கலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ்,திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் வீடுகள் தோறும் கருப்புக் கொடியேற்றி எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என திமுக தலைவர் முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்பேரில் மாநிலம் முழுவதும் திமுகவினர் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏந்தியும், வீடுகளின் முன் கருப்புக் கொடி கட்டியும், கோலமிட்டும் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

இச்சூழலில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சேலத்தில் இருந்து நாமக்கல்லுக்கு வந்தார். நாமக்கல் நல்லிபாளையத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் முதல்வர் ஸ்டாலின் தங்கினார். தொடர்ந்து நாமக்கல் நல்லிபாளையத்திற்கு கருப்பு உடை அணிந்து முதல்வர்ஸ்டாலின் வந்தார். இதனையடுத்து அங்கு செல்லப்பன் என்பவரது வீட்டின் முன் உள்ள கொடிக் கம்பத்தில் தொகுதி மறுவரை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடியேற்றினார். மேலும், மசோதா நகலைதீயிட்டு எரித்தார்.

முன்னதாக தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், வெல்வோம் எனவும் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோஷம் எழுப்பப்பட்டது. தொடர்ந்து நாமக்கல் உழவர் சந்தைக்கு வந்தமுதல்வர்ஸ்டாலின் அங்கு விவசாயிகள், மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடு பட்டார்.

அப்போது நாமக்கல் தொகுதி திமுக வேட்பாளர் ராணி, கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முதல்வர் ஸ்டாலின் பதிவு: தொடர்ந்து, இன்று நடைபெற்ற போராட்டம் குறித்து தமிழக முதல்வர் வெளியிட்ட, எக்ஸ் பதிவில், தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத்தீ பரவட்டும், பாசிச பா.ஜ.க.வின் ஆணவம் வீழட்டும். அன்று, தமிழ்நாட்டில் பற்றத் தொடங்கிய இந்தி எதிர்ப்புத் தீ டெல்லியைச் சுட்டெரித்தது. டெல்லி பணிந்தபின்பே எங்கள் தீ தணிந்தது. இன்று, தமிழரைச் சொந்த நாட்டில் அகதிகளாக்கும் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்து மற்றுமொருதீயினைப் பற்ற வைத்திருக்கிறேன்.

இத்தீயும் திராவிட நாடெங்கும் பரவும். பாஜக.வின் ஆணவத்தை அடக்கிக்காட்டும். "தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் – இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ" எனத் தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதாவை எதிர்ப்பவர்களை பெண்கள் மன்னிக்கவேமாட்டார்கள்; மக்களவையில் பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி: பெண்கள் இடஒதுக்கீடு மசோதா எதிர்ப்பவர்களை நாட்டின் பெண்கள் மன்னிக்கமாட்டார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத்தொடர் இன்று (ஏப்ரல் 16) கூடியது. அப்போது மக்களவையில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன்ராம்மேக்வால், சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டை வழங்கும் மசோதா, தொகுதி மறுவரையறை சட்டத்திருத்த மசோதா, 131-வது அரசியல் சட்டத் திருத்தம் என மூன்று மசோதாக்களைத் தாக்கல் செய்தார்.

மசோதாக்கள் மீது ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு இடையே காரசார விவாதம் நடைபெற்று வருகிறது. நாளை (ஏப்ரல் 17) மாலை 04.00 மணிக்கு மசோதாக்கள் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் பிற்பகல் 03.00 மணியளவில் பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்கள் மீது மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி இன்று உரையாற்றினார். அப்போது, "நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் இதுவொரு மைல்கல்; இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முடிவெடுக்கும் செயல்பாடுகளில் பெண்களைப் பங்கேற்கச்செய்ய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. 21-ஆம் நூற்றாண்டில் இந்தியா நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்கிறது. 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்பது நல்ல உள்கட்டமைப்பை மட்டும் குறிப்பதல்ல; கொள்கை வகுப்பதில் பெண்களின் பங்களிப்பையும் குறிக்கும். பெண்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்த்தவர்களை நாட்டின் பெண்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான இந்த முக்கிய வாய்ப்பை நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் தவறவிட வேண்டாம். பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை எதிர்ப்பவர்கள் நீண்ட காலத்திற்கு அதற்கான விலையை கொடுக்க நேரிடும். பெண்கள் இடஒதுக்கீட்டுக்கு அரசியல் அளவுக்கோல் வேண்டாம். இடஒதுக்கீட்டை எதிர்த்தவர்களைக் கடந்த காலங்களில் பெண்கள் மன்னிக்கவில்லை. உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு தரும்போது நாடாளுமன்றத்தில் ஏன் தரக்கூடாது? எந்தவொரு மாநிலத்திற்கும் அநீதி இழைக்கப்படாது; பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவுக்கு அரசியல் சாயம் பூச வேண்டாம்" என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

# "தொகுதி மறுவரையறையால் தமிழகத்துக்கு பாதிப்பு இருக்காது; மத்திய அரசு உறுதியளித்துள்ளது" எடப்பாடி பழனிசாமி பேச்சு



சென்னை: "தொகுதி மறுவரையறையால் தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் எடப்பாடி கே. பழனிசாமி சித்தாபுதூர் வி.கே.கே மேனன் சாலை அருகில் சாலை வலம் வந்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசும்போது, "தொகுதி மறுவரையறையால் பாதிப்பு இருக்காது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது. தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் தொகுதி மறுவரையறை இருக்கும்.

மகளிருக்கு 33 % இட ஒதுக்கீடு கிடைக்காமல் தடுக்கவே ஸ்டாலின் தொகுதி மறுவரையறையை எதிர்க்கிறார். பெண்கள் மத்தியில் மத்திய அரசுக்கு நல்ல பெயர் கிடைத்து விடும் என நினைக்கிறார்.

பல வருடங்கள் மத்தியில் அமைச்சராக இருந்தவர் ப. சிதம்பரம். நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் தமிழ்நாட்டுக்கு என்ன கொண்டு வந்துள்ளார்?,

எங்களைப் பற்றி பேச ப.சிதம்பரத்துக்கு என்ன தகுதி இருக்கிறது? மத்திய அரசு கூறிய கருத்தை தான் நான் தெரிவித்தேன். தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஸ்டாலின் டபுள் கேம் ஆடுகிறார்.

கோவை மக்கள் உஷாரான மக்கள். இங்கு எங்கேயுமே கருப்புக்கொடி இல்லை. ஸ்டாலினுக்கு தோல்வி ஜுரம் வந்துவிட்டது. அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு பொய் வழக்குப் போட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். என்று பழனிசாமி தெரிவித்தார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# 200 யூனிட் இலவச மின்சாரம் முதல் ஒரு பவுன் தங்கம் வரை: தவெக தேர்தல் அறிக்கை முக்கிய அம்சங்கள்

சென்னை: ஏழைப் பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம் வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் 200யூனிட் இலவசமின்சாரம் வழங்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையைதவெகதலைவர் விஜய் வெளியிட்டார்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக தவெக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:




• வெற்றி மகளிர் திட்டம்: 60 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் ரூ.2500 வரவு வைக்கப்படும்.

• ஏழைப்பெண்களின் திருமணத்துக்கு 8 கிராம் தங்கம் மற்றும் பட்டுச்சேலை வழங்கப்படும்.

• 12-ஆம் வகுப்புவரை மாணவர்களின் இடை நிற்றலை தடுக்க மாணவர்களின் தாயாருக்கு ஆண்டுக்கு ரூ.15 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும். • 12ஆம் வகுப்புக்குப்பிறகுபிஎச்டிவரை படிக்கும் மாணவர்களுக்கு ரூ.20 லட்சம் வரை பிணையில்லா கடன் வழங்கும் திட்டம்.

• ஒவ்வொருவருக்கும் வருடாந்திர உடல் பரிசோதனை, மலிவு விலை மருந்துகள் வழங்கப்படும். • 29 வயதுக்கு மேல் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு ரூ.4000, பிளஸ்டூ படித்தவர்களுக்கு மாதம் ரூ.2500 வழங்கப்படும்.

• ஆண்டுக்கு 6 விலையில்லா சிலிண்டர்கள் வழங்கப்படும்.

•மாணவர்களின்கல்வி மேம்பாட்டுக்காக 100 காமராஜர்சிறப்புபள்ளிகள் உருவாக்கப்படும்.

• 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்து வேளாண் கூட்டுறவு சங்கங்களில் கடன்பெற்ற விவசாயிகளுக்கு முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும்.

• 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு 50சதவீதம் கடன் தள்ளுபடி செய்யப்படும்.

• 2 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகளின் குழந்தைகளின் கல்விச்செலவை அரசே ஏற்கும்.

• அனைத்து மாவட்டங்களிலும் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தரமான கல்வி வழங்கும் உண்டு உறைவிடப்பள்ளிகள்

• ஒவ்வொரு குடும்பத்து க்கும் 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும்.

•போதைப்பொருள் இல்லா தமிழகம் உருவாக்கப்படும் •குத்தகை விவசாயி கள், விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும்.

•ஒவ்வொருகுடும்பத்து க்கும் ரூ.25 லட்சத்துக்கு ஹெல்த் இன்சூரன்ஸ் வழங்கப்படும்.

• ஏஐ மூலம் இலவசப் போட்டித் தேர்வு பயிற்சி மையம் அமைக்கப்படும்.

• நெல்லுக்கு குவிண்டாலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.3500 வழங்கப்படும்

• கரும்புக்கு டன்னுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.4500 வழங்கப்படும்.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து பகுதிகளில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுடன் பிரச்சாரத்தில் வாக்குகள் சேகரித்தார்.

நிகழ்வின்போது தூத்துக்குடி மாவட்டத் துணைச் செயலாளரும் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய மாப்பிள்ளையூரணி தேர்தல் பொறுப்பாளர் ஜெயக்குமார்ரூபன், ஒன்றிய செயலாளர் சரவணகுமார், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட சுற்றுசூழல் அணிஅமைப்பாளர்பொன்பாண்டிரவி, மாவட்டதொழிலாளர்அணிதுணைஅமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ், மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி பால்துரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழகநிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட திரளானோர் உடனிருந்தனர்.

## சட்டமன்றத் தேர்தலில் திமுகவிற்கு வாக்களிக்காமல் புறக்கணிக்கப்போவதாக தேனியில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் முடிவு



தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்த அனைத்து விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் தேனி அருகே கொடுவிலார்பட்டியில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் நிறுவனர் ஈசன் முருக சாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு ஆலோசனையில் ஈடுபட்டனர்

பின்னர்செய்தியாளர்களை சந்தித்து பேசிய விவசாயிகள் சங்க நிறுவனர் ஈசன் முருகசாமி வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் திமுகவிற்கு வாக்களிக்காமல் புறக்கணிப்பு செய்ய வேண்டும் என முடிவு செய்துள்ளோம் கடந்த சட்டமன்றத் தேர்தலில் விவசாயிகளுக்காக கொடுத்த 83 வாக்குறுதிகளில் 73 வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

1.10 லட்சம் ஏக்கர் விவசாயிகளின்நிலத்தை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்த்துள்ளது திமுக அரசு, உரிமைக்காக போராடிய விவசாயிகள் மீது குண்டர் சட்டம் போட்ட ஒரே அரசு திமுக அரசு மட்டும் தான், மணல் திருட்டை தட்டி கேட்கின்ற விவசாயிகள் மீதும் கறிக்கோழி விலை உயர்வு கேட்ட விவசாயிகள் மீதும் பொய் வழக்கு போடப்பட்டு நான் உட்பட விவசாயிகள் சிறையில் அடைக்கப்பட்டோம்

வேறு எந்த கட்சிகளுக்கு வேண்டுமானாலும் வாக்களியுங்கள் ஆனால் திமுகவிற்கு மட்டும் வாக்களிக்க வேண்டாம் என விவசாயிகளிடம் கோரிக்கை வைத்துள்ளோம்

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள முதல்வருடன் நடப்பு உறவில் இருக்கும் முதலமைச்சர் ஸ்டாலின் ஏன் பேபி அணையை பல நடவடிக்கை எடுக்கவில்லை முல்லை பெரியாறு அணையை 152 அடி உயர்த்த நடவடிக்கை எடுக்கவில்லை?

எனவே விவசாயிகள் பொதுமக்கள் திமுகவிற்கு வாக்களிக்காமல் புறக்கணிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்

## கோவை ரயில் நிலையம் பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு விழா

### கட்சியின் மாநில தலைவர் வழக்கறிஞர் சக்தி வேல் வெளியிட்டார்



கோவை ரயில் நிலையம்பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் இன்று, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் தேர்தல் அறிக்கைகள் வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக இக்கட்சியின் மாநில தலைவர் வழக்கறிஞர், எழுச்சி புயல் சக்தி வேல், மற்றும் இக்கட்சியின் மாநில துணைதலைவரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் ஆகியோர் வெளியிட்டனர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய வழக்கறிஞர் சக்தி வேல் கூறியதாவது..

தமிழகத்தில் காங்கிரஸ், திமுக, அதிமுக, என பல்வேறு கட்சிகள் இந்தியா விடுதலை பெற்ற நாள் முதல் ஆண்டு வருகின்றனர். ஆனாலும் இதுவரை தமிழகத்தில் 8 கோடி பேர் உள்ள நிலையில், 6 கோடி மக்கள் இன்னமும், ஏழ்மை நிலையில் தான் உள்ளனர். 70 சதவிகிதம் பேர் நம்பி இருக்க கூடிய வேளாண்மை துறை, மிகபெரிய சரிவை சந்தித்து உள்ளது. தமிழகத்தின் நீர் ஆதாரமாக உள்ள பல ஆறுகளை இன்னமும் அரசுகள் இணைக்க படவில்லை, இந்த நிலையில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் நீண்ட கால பிரச்சனையான கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய உரிய நடவடிக்கை எடுக்க படும் எனவும், தமிழகத்தின் நீர் பாசன திட்டங்களை மத்திய அரசின் உதவியுடன் உடனுக்குடன் நிறைவேற்ற படும், தமிழகத்தில் உள்ள சிறு குறு தொழில் களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க படும், வேலையில்லா திண்டாட்டத்தை தவிர்க்க, இளைஞர்களின் புதிய புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க படும் எனவும், பிற மாநல மக்கள் தமிழகத்தில் அசையா சொத்துகளை வாங்கதடை விதிக்க படும் என்பது போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதாக தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளதாக கூறினார்..

இந்த இக்கட்சியில் இக்கட்சின் வேட்பாளர்கள் மீனாட்சி சுந்தர், மகேஷ்குமார், வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் பால்ராஜ், ஜான், லெட்சுமி, ஜெபா, கார்த்திகா, திருவள்ளுவர் நகர் இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## வெளியூர் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதால், தூத்துக்குடி தொகுதி மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடையாது

### திமுக வேட்பாளர் அமைச்சர் கீதா ஜீவன் பிரச்சாரத்தில் பேசினார்

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கீதாஜீவன், மாநகராட்சிக்குட்பட்ட 9,15,16,17, 18வது ஆகிய வார்டுகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், வட்டச்செயலாளர்கள் பொன்பெருமாள், மந்திரகுமார், கருப்பசாமி, பொன்னுச்சாமி, கவுன்சிலர்கள் கண்ணன், இசக்கிராஜா, ஜான், ராமர் ஜெபஸ்டின்சுதா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி ராஜகோபால் நகரில் பிரச்சாரத்தைத் தொடங்கி ராஜீவ் நகர், பி அண்ட் டி காலனி, மடத்தூர், சாமுவேல்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பின்னர் கீதாஜீவன் பேசுகையில் கடந்த ஐந்து ஆண்டு கால திமுக ஆட்சியில் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் பயனடைந்துள்ளது. மக்களின் கோரிக்கைகளை ஏற்று இந்தப் பகுதிகளில் புதிய தார்ச்சாலைகள், பூங்காக்கள், ரேஷன் கடைகள் மற்றும் மினி பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், விடுபட்ட கட்டமைப்புப் பணிகள் தேர்தல் முடிந்தவுடன் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும் உறுதி அளித்தார்.

மத்திய அரசின் செயல்பாடுகளை விமர்சித்த அவர், தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழகத்தின் உரிமையைப் பறிக்க பாஜக முயல்வதாகக் குற்றம் சாட்டினார். உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம்கொடுத்து, தென்னிந்திய மாநிலங்களைப்பழிவாங்கும்நோக்கில் புதிய நடைமுறைகளை மத்திய அரசு கொண்டு வரத் துடிப்பதாகச் சாடினார். மேலும், மகளிர் உரிமைத் தொகை 2,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பது உள்ளிட்ட திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துரைத்த அவர், தமிழகத்தின் பெருமையைக் காக்க ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராக வேண்டும் என வலியுறுத்தினார்.

தொகுதியைப் பற்றித் தெரியாதவர்கள் சென்னையிலிருந்து வந்து போட்டியிடுவதாகவும், அவர்களுக்கு அளிக்கும் வாக்கு மக்களுக்கு எவ்வித நன்மையும் தராது என்றும் தவெக வேட்பாளரை மறைமுகமாக விமர்சித்தார். தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுக்கவும், திமுக ஆட்சி தொடரவும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு அவர் உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்.

பொதுவாழ்க்கையில் இருக்கும்என்னைபொதுமக்கள் தொலைபேசி மற்றும் நேரில் எந்த குறைகள் கூறினாலும் அதை தீர்த்து வைக்கும் இடத்தில் உங்களோடு இருக்கிறேன். இந்த தேர்தலில் தமிழகத்தில் திமுக ஆட்சி அமைய வேண்டும் ஸ்டாலின் முதலமைச்சராக வேண்டும். அதற்கு அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். என்று பிரச்சாரத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

இந்த பிரச்சாரத்தில் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநகர இலக்கிய அணி தலைவர் சக்திவேல், அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், துணை அமைப்பாளர் பால்ராஜ், சுற்றுச்சூழல்அணிதலைவர் வினோத், தொண்டரணி அமைப்பாளர் முருக இசக்கி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் செல்வலட்சுமி, வக்கீல்கள் சீனிவாசன், ஆனந்தகபரியேல்ராஜ், டென்சிங், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டினோ, பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், ஜெயக்குமார், நிர்மல்ராஜ், தொழிற்சங்க நிர்வாகிகள் முருகன், உலகநாதன், வேல்முருகன். சண்முகராஜ், வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, சேகர், கவுன்சிலர்கள் கனகராஜ், சந்திரபோஸ், திமுக மாநில பேச்சாளர் சரத்பாலா, காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் சண்முகம், முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியர் எஸ்டிபிஐ மாவட்ட செயலாளர் மைதீன்கனி, தேமுதிக தொகுதி பொறுப்பாளர் வல்லரசு துரை, விடுதலை சிறுத்தை கட்சி பொருளாளர் வில்சன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் தனலட்சுமி, மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட துணைச்செயலாளர் ஜாகிர்உசேன் மனிதநேய மக்கள் கட்சி மாவட்டசெயலாளர்யூசுப், திராவிடர் கழக தலைவர் முனியசாமி, மதிமுக மாநகர செயலாளர் முருகபூபதி, திமுக நிர்வாகிகள் தெர்மல்துரை, செல்வம், சுந்தர்ராஜன், பழனி, ஜெபராணி, பகுதி அணி அமைப்பாளர்கள் சூர்யா, காசிராஜன், மகேஸ்வரி, வட்டப்பிரதிநிதிகள் தஸ்நேவிஸ், ராபின்சன், ஜெபஸ்தியான், சுரேஷ், எஸ்டிபிஐ தொகுதி பொறுப்பாளர் காதர்உசேன், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ப்ரீத்தி, மைதீன், ராஜன், ஐசன்சில்வா, மதிமுக மகாராஜ், தொம்மை, பொன்ராஜ், மற்றும் மணி அல்பட் உள்பட கூட்டணி கட்சியை சார்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழக வெற்றி கழகம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி நட்சத்திர பேச்சாளர் நாஞ்சில் சம்பத் அவர்கள் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் கௌரி சித்ரா அவர்களுக்கு தாராபுரம் அண்ணா சாலை முன்பு விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் அவர்களின் அறிவுறுத்தலின் படி இணை செயலாளர் ஷேக் பரீத் அவர்களின் அவர்கள் முன்னிலையில் தாராபுரம் வடக்கு நகர செயலாளர் மனோஜ் பிரபாகர் தலைமையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டு நகர இணைச் செயலாளர் ரஜினிகுமார், நகர துனை செயலாளர் தினகரன் நகர தலைமைச் செயற்குழு உறுப்பினர் இதயகுமார், மற்றும் நகர நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர் தமிழக வெற்றி கழகம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி நட்சத்திர பேச்சாளர் நாஞ்சில் சம்பத் அவர்கள் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் கௌரி சித்ரா அவர்களுக்கு தாராபுரம் அண்ணா சாலை முன்பு விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் அவர்களின் அறிவுறுத்தலின் படி இணை செயலாளர் ஷேக் பரீத் அவர்களின் அவர்கள் முன்னிலையில் தாராபுரம் வடக்கு நகர செயலாளர் மனோஜ் பிரபாகர் தலைமையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டு நகர இணைச் செயலாளர் ரஜினிகுமார், நகர துனை செயலாளர் தினகரன் நகரதலைமைச்செயற்குழு உறுப்பினர் இதயகுமார், மற்றும் நகர நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்



தென்காசி மாவட்டம் விகேபுதூர் தாலுகா கருவந்தாகிராமத்தில் பத்திரகாளியம்மா கோவில் தமிழ்புத்தாண்டுசித்திரைதிருவிழாவில் ஊர்நாட்டாமைஆர்எம்வைரக்கண்ணுதலைமையில் ராமசாமிநாடார் புதழ்வன்ஐந்தாவது தலைமுறையாக சித்திரைஒன்னாம்தேதிமிகசிறப்பாககொண்டாடப்பட்டது நிகழ்ச்சியில் கணக்கப்பிள்ளை காளிச்சாமி சுடலைகாசி மற்றும்பொதுமக்கள்அனைவரும்கலந்துகொண்டனர்.

## கொடமாண்டபட்டியில் காங்கிரஸ் வேட்பாளர் குப்புசாமிக்கு ஆதரவு செல்வப் பெருந்தகை தீவிர வாக்கு சேகரிப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கு மத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கொடமாண்டபட்டி பகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 'கை' சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் குப்புசாமி வெற்றி பெற வேண்டும் எனக் கோரி கட்சி மாநிலத் தலைவர் செல்வ பெருந்தகை தலைமையில் தேர்தல் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்றது.

இந்த பிரச்சாரத்தின் போது வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் 'கை' சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அப்போது பேசிய அவர், தமிழ்நாட்டில் கடந்த காலத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியதலைமையாகமுகஸ்டாலின்அவர்களை குறிப்பிட்டு, மகளிர் உரிமைத் தொகை போன்ற பல நலத்திட்டங்களை வழங்கியதை எடுத்துரைத்தார்.

மேலும், வரவிருக்கும் தேர்தலில் குப்புசாமி 'கை' சின்னத்தில் வெற்றி பெற்றால், மகளிர் உரிமைத் தொகையை உயர்த்தும் உள்ளிட்ட பலவாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என கூறினார். பணமாக உதவிகளை வழங்கும் ஆட்சியே மக்கள் நலனில் செயல்படும் எனவும் வலியுறுத்தினார்.

அதே நேரத்தில், நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை சுட்டிக்காட்டிய அவர், ராகுல் காந்திதொடர்ந்து நாடாளுமன்றத்தில் மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து வருவதாகவும், தென் மாநிலங்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மத்திய அரசின் மறுசீரமைப்பு திட்டங்கள் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் அபாயம் இருப்பதாகவும், இதற்கு எதிராக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

இத்துடன், எந்த கட்சிக்கும் அளிக்கப்படும் ஓட்டு பாஜகக்கு ஆதரவாக மாறும் நிலை ஏற்படக்கூடும் என்பதால், மக்கள் தெளிவுடன் 'கை' சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இறுதியாக, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியே நாட்டையும்தமிழ்நாட்டையும்பாதுகாக்கும்சக்தியாக இருப்பதாகக் கூறி, குப்புசாமிக்கு பெரும்பான்மை வாக்குகள் அளித்து வெற்றி பெறச் செய்யுமாறு பொதுமக்களிடம் அவர் கேட்டுக் கொண்டார்.






ஈரோடு மாவட்டம் சித்தோடு பகுதியில் உள்ள ஈரோடு சிட்டி சென்ட்ரல் பள்ளியில் (15.04.2026) அன்று மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் ஓரிகாமி கலையின் மூலம் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு சின்னம் மற்றும் வாசகங்களை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்று ஒரே நாளில் இரண்டு உலகச்சாதனை படைப்புகளை பார்வையிட்டார்.



தென்காசி மாவட்டம் சுரண்டை நகராட்சியில் 100% வாக்கு அளிப்போம், நம்வாக்கை விற்க மாட்டோம், என பல்வேறு கோஷங்களை எழுப்பி, காமராஜர் காய்கறி மார்க்கெட் இருந்து பேரணியாக, அண்ணாசிலை, பழைய பஸ் ஸ்டாண்ட், நகராட்சி வந்தடைந்தது இதில் அன்னலட்சுமி நர்சிங் கல்லூரி மாணவிகள், நகராட்சி பணியாளர்கள், நகராட்சி ஆணையாளர் ஆனந்த், நர்சிங் கல்லூரி நிர்வாகி வைரமுத்து உள்பட சமூக அலுவலர்கள் அமல்ராஜ், கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் அருகே அம்பேத்கர் பிறந்தநாள் விழா

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள கீழ்க்கரணை ஊராட்சியில் வணிகர் அணி மாவட்ட அமைப்பாளர் மு.ராஜேஷ் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது இந்நிகழ்ச்சியில் சு. மகேந்திரன் முகாம் செயலாளர் சா. வெங்கடேசன் துணை செயலாளர் கீழ். சு. சின்னத்தம்பி முகாம் துணை செயலாளர்

நா. கங்காதாரன் முகாம் துணை செயலாளர் அ. நிஷாந்த் இளம் சிறுத்தை எழுச்சி பாசறைந. ஹரிஸ் இளம் சிறுத்தைஎழுச்சிபாசறை செ. ஹரிதாஸ், வெங்கடேசன். எழில்ராஜ். மா,சரத்குமார் மகளிர் அணி செயலாளர்கள் : சந்தியா , தாமியா, வினோதினி, சமீம், விஜயலக்ஷ்மி, ஷாலினி, சிவசங்கரி, சித்ரா,தர்ஷினி, பரமேஷ் உள்ளிட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியை ஏற்பாடு ராஜேஷ் கீழ்க்கரணை முகாம் மதுராந்தகம் தொகுதி வனிகர் அணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் நிர்வாகிகள் நிகழ்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது





பாராளுமன்ற தொகுதி வரையறு என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் கருப்பு சட்டை அணிந்து தென்காசியில் திமுக எஸ்டிபிஐ கட்சி அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர். திமுக மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் கூட்டணி கட்சியை நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நகல் எரித்தனர்.

## கோவையில் ‘லீடர்’ பட வெற்றி விழா கொண்டாட்டம்

# மாட்டுவண்டி இழுத்தபடி கங்கா திரையரங்கிற்கு வந்த கூல் சுரேஷ் கலகலப்பு பேட்டி

ரெஜண்ட் சரவணன் நடித்த லீடர் படம் தமிழகம் முழுவதும் திரையரங்குளில் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ளது..

இந்நிலையில் லீடர் படம் வெளியாகி பத்தாவது நாள் வெற்றி விழா கொண்டாட்டம் கோவை நூறடி சாலையில் உள்ள கற்பகம் சினி காம்ப்ளக்ஸ் வளாகத்தில் நடைபெற்றது...

இதில் அகில இந்திய லெஜண்ட் சரவணன் ரசிகர் மன்ற நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்..

விழாவிற்கு வந்த நடிகர் கூல் சுரேஷ் தனது வழக்கமான வித்தியாசமான ஸ்டைலில் கலந்து கொண்டது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மாட்டுவண்டியைதானே இழுத்தபடி நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வந்த அவர், ரசிகர்கள் மத்தியில் பெரும் சிரிப்பையும் ஆரவாரத்தையும் ஏற்படுத்தினார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கூல் சுரேஷ்,

"நல்ல படங்களுக்கு ரசிகர்கள் எப்போதும் ஆதரவு தருவார்கள். 'லீடர்' படம் அதற்கு ஒரு உதாரணம். இப்படம் மேலும் பெரிய "வெற்றி பெற வேண்டும்" என்று கூறினார்.

தொடர்ந்து அண்மையில் இணையதளத்தில் ஜனநாயகன் பட வெளியாக காரணமானவர்களை தேடி கண்டு பிடித்து தூக்கில் இட வேண்டும் என ஆவேசமாக கூறினார். யூடியுபர் வாட்டர்மிலான் திவாகர் பெண்களை இழிவு படுத்தி பேசியதை வன்மையாக கண்டிப்பதாக பேசிய கூல் சுரேஷ் திடீரென ஆவேசம் வந்தவராக தனது காலணிகளை கழட்டி காட்டியபடி திவாகரை செருப்பால் அடிப்படை என பகிரங்க மிரட்டல் விடுத்தார் இந்த சம்பவம் தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





## புரட்சியாளர் அம்பேத்கர் 135 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

# பாபுராயன்பேட்டை ஊராட்சியில் திமுக ஒன்றிய கழக செயலாளர் கோகுலகண்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மாவட்ட செயலாளர் க, சுந்தர் அவர்களின் ஆணைக்கிணங்க அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் கோகுல்கண்ணன் தலைமையில் பாபுராயன் பேட்டை ஊராட்சியில் உள்ள சட்ட மாமேதை சமத்துவ நாயகர் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரின் 135 வது பிறந்தநாளில் அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்து இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர் ஜெ,பார்த்தசாரதி வெங்கிடேசன்.மாவட்ட பிரதிநிதி கருணாகரன் மற்றும் ஒன்றிய ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் தரு. லட்சுமணன்.ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வே.ஜாணகிராமன். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெயகுமார் ஊராட்சி மன்றதலைவர்கள் மின்னல் பாலாஜி.ச.சுதாகர். மு ஊராட்சி மன்றதலைவர் ந.ஏழுமலை துணை தலைவர் பக்தவத்சலம் மற்றும் கழக முன்னோடிகள் த.சண்முகம். ம. மாரி.லட்சுமணன்.தன்ராஜ். கல்லியகுணம். கிளை செயலாளர் முருகன்.கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள் ர.தமிழ்செல்வன். லோகு சிவராஜ்.மற்றும் பல கழக முன்னோடிகள் கலந்துகொண்டநிகழ்ச்சி ஏற்பாடு கிளைச் செயலாளர்கள் .ஏ. இரமேஷ்குமார் த.சுகுமார் முன்னணியில் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கோழிகளை குழி தோண்டி எரித்த கோழிப்பண்ணை உரிமையாளர்

# கிராமம் முழுவதும் துர்நாற்றம் வீசுவதால் நோய் தாக்குதல் ஏற்படும் என அபாயம்

### கோழி பண்ணையில் மாவட்ட நிர்வாகம் முறையாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதிவாசிகள் கோரிக்கை

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகாவிற்கு உட்பட்ட கண்டமனூர் அருகே கணேசபுரத்தில் கால்நடை மருத்துவராக இருக்கும் ராஜேஷ் என்பவருக்கு சொந்தமாக கோழிப்பண்ணைஉள்ளதுகடந்த நான்கு ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இந்த கோழி பண்ணையால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருவதாக புகார் தெரிவிக்கின்றனர்

இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ராஜேஷின் கோழிப் பண்ணையில் நோய் தாக்குதலுக்கு ஆளான கோழிகள் மற்றும் வயதான கோழிகளை குழியில் வைத்து எரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்

இதனால் கோழி பண்ணை அருகில் இருக்கும் குடியிருப்புகள், விவசாய நிலங்களில் கடும் துர்நாற்றம் வீசி வாந்தி போன்ற உடல் உபாதைகள் மற்றும் நோய்வாய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்

இது குறித்து மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் மற்றும் மாவட்ட நிர்வாகம் கோழிப்பண்ணையில் சுகாதாரமற்ற முறையில் அழிக்கபடும் கோழிகள் குறித்து ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதிவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்



## கோவை ராஜவீதி பகுதியில்

# அலையன்ஸ் கிளப் கோயம்புத்தூர் சேரன், ஸ்ரீ சிருங்கேரி சங்கர மடம் மற்றும் ஜெகநாத் டெக்ஸ்டைல் ஆகியவை இணைந்து நீர் மோர் வழங்கினர்





கோவை ராஜ வீதி பகுதியில் உள்ள, சங்கர மடம் திருமணமண்டபத்தில்கோடைவெயிலைமுன்னிட்டு, வெயிலின் தாக்கத்தை குறைக்க பொதுமக்களுக்கு இலவச நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அலையன்ஸ் கிளப் கோயம்புத்தூர் சேரன், ஸ்ரீ சிருங்கேரிசங்கரமடம்மற்றும்ஜெகநாத்டெக்ஸ்டைல் ஆகியவை இணைந்து நடத்திய இந்த நீர் மோர் வழங்கும் விழா நிகழ்ச்சியானது,

இன்று முதல் தொடர்ந்து, 60 நாட்களுக்கு, வழங்க பட உள்ளது. கோடை காலத்தில் பொதுமக்களின் தேவை அறிந்து நீர்மோர் வழங்கப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியினை அலையன்ஸ் கிளப் ஆப் கோயம்புத்தூர் சேரன் அமைப்பின் நிறுவனரும், தமிழ்நாடு பிராமணர்கள் சங்கத்தின் தலைவருமான முன்னாள் ஆளுநர் அலை சி.ஜி.வி கணேசன் துவக்கி வைத்தார். இவ்விழாவில், அலையன்ஸ் மாவட்டம் 250எஸ் இரண்டாம் துணை ஆளுநர் அலை எஸ். பிரபாகரன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் சங்கத்தின் துணைத் தலைவர் முகுந்தன், சங்கர மடத்தின் மேலாளர் வெங்கட்ரமணன், செயலாளர் தர்மராஜ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பொதுமக்களுக்கு நீர் மோரினை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதகை அருகே புலி தாக்கி பெண் தொழிலாளி உயிரிழப்பு



நீலகிரி: ஊட்டி அருகே புலி தாக்கியதில் கூலி பெண் தொழிலாளி உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டம் ஊட்டியை அடுத்த அனுப்பபுரம் பகுதியில் வசித்து வந்தவர் பார்வதி (56). இப்பெண் கூலி தொழிலாளியாக பணிபுரிந்த வந்த நிலையில், தனது கணவர்இறந்தபின்பு,மகன்மற்றும்மகளுடன்வசித்து வந்தார்.

இந்நிலையில்,கடந்த11ஆம்தேதிஇரவுகுடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக கோபமடைந்த பார்வதி வீட்டை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் அவர் வீடு திரும்பாததால், உறவினர்கள் கவலை அடைந்தனர். முதலில் அவர் உறவினர் வீடுகளுக்கு சென்றிருப்பார் என நினைத்திருந்த குடும்பத்தினர், இரண்டு நாட்கள் கடந்தும் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்து,நேற்று (ஏப்.15) காவல்துறை மற்றும் வனத்துறைக்கு தகவல் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து பைக்கரா வனச்சரகர் மஞ்சுஹாஷினி தலைமையில் வனத் துறையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். அப்போது தேயிலைத் தோட்டப் பகுதியில் வனவிலங்கு தாக்கியிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் அப்பெண்ணின் அடையாளங்கள் கண்டறியப்பட்டன. பின்னர் நக்சல் தடுப்பு சிறப்பு படையின் 'ஓமேகா' பிரிவினர் தேடுதல் நடத்தி, அங்கிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கற்பகம் காப்புக்காட்டில் பார்வதியின் உடல் பாகங்களை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து புலி தாக்கியதால் பார்வதி உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து அவரது உடல் பாகங்கள் சேகரிக்கப்பட்டு, உடற்கூறு பரிசோதனைக்காக ஊட்டி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# அச்சிறுப்பாக்கத்தை தாலுக்காவாக மாற்ற நடவடிக்கை எடுப்பேன் தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலர் வாக்குறுதி

மதுராந்தகம் (தனி) சட்ட மன்ற தொகுதியின் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராமங்கள் மற்றும் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுக ளில் தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலர், கொளுத்தும் வெயிலிலும் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியத்திற்குப்பட்ட தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலரின் சொந்த கிராமமான பெரும்பேர்கண்டிகையில் உள்ள கிராம தேவதையான எல்லையம்மன்கோவிலில்வழிபட்டு தனது பிரசாரத்தை நேற்று காலை தொடங்கினார். அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளர் டி.வி. கோகுல கண்ணன், பெரும் பேர்கண்டிகை ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர், ஒன்றிய குழு உறுப்பினர் பார்த்தசாரதி தலைமையில் மலர் மாலை அணிவித்து மலர் தூவி வேட்பாளருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர். பெரும்பேர் கண்டிகை, சிறுபேர்பாண்டி, கல்லியகுனம் அம்மனூர், அல்லானூர்,பாபுராயன்பேட்டை, பொற்பனங்கரனை ஆனைக்குன்றம் எலப்பாக்கம் மோகல்வாடி ரெட்டிபாளையம் ராமாபுரம், வேலாமூர், பாதிரி, காட்டுகருணை, மதூர், கோட்டக்கயப்பாக்கம், விளாங்காடு ஆகிய 22கிராமங்களுக்கு கொளுத்தும் வெயிலில் தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலர், தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் திறந்து வெளி வாகனத்தில் , திம்மாபுரம், உத்தமநல்லூர், திருமுக்காடு சீதாபுரம் சென்று உதயசூரியன்சின்னத்திற்குவாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து, அச்சிறுப்பாக்கம் பேரூராட்சிக்கு உட்பட்ட 15 வார்டுகளிலும் வீதி, வீதியாக சென்று தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்த துண்டறிக்கை கொடுத்தும் மற்றும் அச்சிறுப்பாக்கம்

பேரூராட்சியில்தி.மு.க. ஆட்சியில் சியில் செய்த பணிகளான புதிய சாலைகள் அமைத்தல், வெங்கடேசபுரத்தில் புதிய பூங்கா அமைத்தல், பஜாரில் தாமரைக் குளம் மற்றும் வெங்கடேசபுரத்தில் குளம் தூர்வாரி புனரமைத்தது, சுற்றுச் சூழலை பாதுகாக்க பொதுமக்களின் நலன் கருதி மின்சார மயானம் புதிதாக அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து வேட்பாளர் அமுலு பொன்மலர்,எடுத்துக்கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித் தார். மேலும், என்னை வெற்றி பெற செய்தால் அச்சரப்பாக்கத்தை தாலுக்காவாக மாற்ற நடவடிக்கை எடுப்பேன் என வாக்குறுதி அளித்தார். தி.மு.க. வேட்பாளர் அமுலு பொன்மலருடன் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் சென்று உதயசூரியன்சின்னத்திற்குவாக்கு சேகரித்தனர்.



# ஈரோட்டில் அண்ணல் அம்பேத்கரின் 136வது பிறந்தநாள் விழா போக்குவரத்து கழக தொழிற்சங்கத்தினர் மாலை அணிவித்து மரியாதை



சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் 136-வது பிறந்தநாள் விழா தமிழகம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.இதன் ஒருபகுதியாக, ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அம்பேத்கரின் முழு உருவச் சிலைக்கு, தமிழ்நாடு அரசுப்போக்குவரத்து கழகத்தின் ஈரோடு மண்டலம் சார்பில் சிறப்பான முறையில் மரியாதை செலுத்தப்பட்டது.

புரட்சி பாரதம் தொழிற்சங்கத்தின் மாநிலத் தலைவர் பி. ரவிச்சந்திரன் தலைமையில் இந்த பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது. இதில் புரட்சி பாரதம் கட்சியின் மகளிர் அணி மாநிலத் தலைவர் புவனேஸ்வரி ரவிச்சந்திரன்,ராஜ்குமார் பொருளாளர்,புரட்சி பாரதம் தொழிற்சங்கம்.

தேவராஜ் மண்டலத் தலைவர், எஸ்சி/எஸ்டி தொழிலாளர் தொழிற்சங்கப் பேரவை.

சின்னச்சாமி செயலாளர், எஸ்சி/எஸ்டி தொழிலாளர் தொழிற்சங்கப் பேரவை. கண்ணன் கோபி கிளைச் செயலாளர். எஸ்.ஆண்டவன் தலைவர். பரமசிவம் மற்றும் மாரிமுத்து கலந்துகொண்டு, அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்

மேலும்கிளைத்தலைவர்கள். போக்குவரத்து கழகத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்று அண்ணல் அம்பேத்கரின் புகழுக்கு பெருமை சேர்த்தனர்.



ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மருமகன் சபரீசன் அவர்களை சமூக நீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவை நிறுவனத் தலைவர் வடிவேல்ராமன் மற்றும் தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் ஆகியோர் நேரில் சந்தித்து பேசினார்கள் மாவீரன் பொல்லான் வரலாற்று புத்தகத்தை வழங்கினார்கள்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத்தொகுதி, கம்புளியாம்பட்டியில் நேற்று (16.04.2026) 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத்தொகுதி, கம்புளியாம்பட்டியில் நேற்று (16.04.2026) 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

# நந்தா பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் வளாகத்தேர்வு



நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு துறையின் சார்பில் இறுதியாண்டு பயின்று வெளியேறும், இயந்திரவியல் மற்றும் இரசாயன பொறியியல் மாணவர்களுக்கென, தூத்துக்குடியில் இயங்கி வரும் உரம் மற்றும் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்து வரும் "ஸ்பிக்" நிறுவனமானது தனது வளாகத்தேர்வினை அண்மையில் சிறப்பாக நடத்தியது.

இவ்வளாகத் தேர்வின் துவக்க நிகழ்ச்சிக்கு "ஸ்பிக்" நிறுவனத்தின் மனிதவள மூத்த மேலாளர் சிவக்குமார் தலைமையிலானகுழுசிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியினைத் துவக்கி வைத்தார்கள். மேலும், பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால், பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் ஜி.மோகன்குமார் மற்றும் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு துறையின் ஒருங்கிணைப்பாளர் கே.வி. பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பின்னர் "ஸ்பிக்" நிறுவனத்தின் மனிதவள மனிதவள மூத்த மேலாளர் சிவக்குமார் உரையாற்றுகையில், எங்களது நிறுவனமானது 1975 ஆம் ஆண்டு முதன் முதலில் தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்டது.

இதுதான் ஆசியாவிலேயே மிகப்பெரிய உர வளாகம் என்றும், அதன் மூலம் சுமார் 6.2 லட்சம் L601 வேப்பம் பூசிய யூரியா உரங்களை ஆண்டுதோறும் உற்பத்தி செய்து வருவதில் பெருமையடைவதாக கூறினார்.

அதுமட்டுமல்லாது மனித மூலதனமே தனது நிறுவனத்தின் முக்கிய சொத்து என்கிற அடிப்படையில் "ஊழியர்கள் வளர்ச்சியில் பங்காளிகள்" என்பதில் உறுதி பூண்டுள்ளதாகத் தெரிவித்தார். இவ்வளாகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளுடன் கூடிய மாத வருமானம் வழங்கப்படும் என்றும் கூறினார். இதனை சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி, தேர்வில் வெற்றிபெற வாழ்த்துகிறோம் என்று கூறி. வளாகத்தேர்வு சம்மந்தமான மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

இவ்வளாகத்தேர்வில் இயந்திரவியல் மற்றும் இரசாயன பொறியியல் துறைகளை சார்ந்த சுமார் 210க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு முதலில் எழுத்துத் தேர்வும் அதனைத் தொடர்ந்து நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டது. இறுதியாக வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பணி நியமனத்திற்கான உறுதி சான்றிதழ் வழங்கப்பட்டது.

இவ்வளாகத் தேர்வினை ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலக ஆசிரியர்களை ஸ்ரீ நந்தா அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன், அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தாகுமார் பிரதீப், எஸ்.. திருமூர்த்தி, மற்றும் தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் பாராட்டினார்கள்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத்தொகுதி, கம்புளியாம்பட்டியில் நேற்று (16.04.2026) 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று 250க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டுவைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் கோட்டை பகுதி 35, 36 வது வார்டில் 1604 2026 நேற்று காலை கை சின்னத்தில் வாக்கு சேகரித்தார், கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.ராமசந்திரன் , வார்டு திமுக கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, வார்டு கழகம், சார்பு அணிகள் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, நிர்வாகிகள், திமுக கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துகொண்டு வேட்பாளருக்கு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.

# TMC making false claims that BJP would stop fish consumption if it wins Bengal polls:



*Assam Chief Minister Himanta Biswa Sarma on Thursday accused the TMC of making false claims that the BJP would stop consumption of meat and fish if it wins the assembly polls in West Bengal. Addressing a poll rally in support of BJP candidates here in north Bengal, Sarma asserted that one can eat as much non-vegetarian food as one wants in saffron party-ruled Assam.*

*He said that the only restriction in Assam is on consumption of beef. "You can go to Dhubri or Goalpara and eat fish and meat as much as you want; there is no restriction," Sarma said.*

*Also Read: West Bengal: Murshidabad to get highest CAPF deployment for Phase 1 polls "(CM) Mamata Banerjee is worried that once a BJP government is formed in West Bengal, the beef trade here will stop," he alleged. The Assam chief minister also claimed that the Trinamool Congress (TMC) wants cattle smuggling to Bangladesh to "continue so that they can fill their pockets". Central investigating agencies, including the CBI and the Enforcement Directorate, have been probing alleged cattle smuggling from West Bengal to Bangladesh. Sarma said West Bengal requires a government capable of providing proper "treatment" to Bangladeshi immigrants, who entered the state illegally. Also Read: Why ED arrested I-PAC co-founder Vinesh Chandel days before West Bengal assembly polls "We have to make the BJP victorious in West Bengal in this election to ensure this," he said.*

*Sarma said that the BJP government in Assam has ensured that Bangladeshi Muslims do not illegally occupy land in the northeastern state.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.